**அத்தனகல்ல பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அத்தனகல்ல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அத்தனகல்ல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சேவைக்கான கட்டணக் கணக்கில் ரூபா 61,200 குறைவாக பதியப்பட்டமையின் காரணமாக விரிவான வருமானக்கூற்றில் மிகை அப்பெறுமதியால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்யப்படும். | சரியான பெறுமதியை பதிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 70,550 பெறுமதியான | 2021 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்யப்படும். | செலவினமாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | Virus Guard நுகர்வுப் பொருள் இருப்பு கணனி மென்பொருளின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 73,750 பெறுமதியான T 2309 ரோனர் மற்றும் Epson ரிபன் கணனியின் கீழ் பிறிண்டர் கொள்வனவு செய்தலாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்யப்படும். | செலவினமாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,500 பெறுமதியான 01 வீல் பெரோ மற்றும் ரூபா 4,200 பெறுமதியான நிலம் தோன்றும் உபகரணம் என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட பணம் வீதிகள், மதகுகள் மற்றும் பாலத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்யப்படும். | செலவினமாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (உ) | கூட்டுப்பெறுமதி ரூபா 1,560,190 ஆன பழுதுபார்த்தல்கள் பராமரிப்பு செலவினம் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக விரிவான வருமானக் கணக்கில் மிகை அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்யப்படும். | சரியான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 19,136,354 தொகையான நூலக புத்தகங்களின் எஞ்சிய இருப்பு மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 17,932,689 ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 1,203,665 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது நடைமுறை சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்யப்படும். | மெய்மையாய்வு அறிக்கை மற்றும் இணங்காமைக்கான காரணங்களை கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் கணனி மென்பொருள் நடைமுறையல்லா சொத்தாக நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பல வருட காலம் முதல் செயற்படுத்தப்படுகின்ற ஆதனவரி, ஏனைய வருமானம் மற்றும் நிலுவை வருமானம் மற்றும் களஞ்சிய நிர்வாகத்திற்காக பயன்படுத்தப்பட்ட ரூபா 1,460,000 பெறுமதியான மென்பொருள் முறைமை மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்யப்படும். | மென்பொருள் முறைமையை மூலதனமாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வேலைகளை அமுல்படுத்துவதற்கு பிரதேச செயலகத்திலிருந்து நிர்வாக செலவினமாக கிடைக்க வேண்டிய ரூபா 305,555 தொகை வருமானமாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக விரிவான வருமானக்கூற்றில் மிகை அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறவேண்டிய நிர்வாக செலவினத் தொகை ரூபா 305,555 ஆக இருக்க வேண்டியிருந்ததுடன் மிகுதி ரூபா 394,200 தொகை உரிய செயற்திட்டத்திற்கான தொகையாகும். அதனால் நிர்வாகச் செலவினமான ரூபா 305,555 தொகை கணக்கீடு செய்தல் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சமர்ப்பிக்கப்படும். | பெற வேண்டிய நிர்வாக செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 332,622,196 தொகையான மூலதன மானியங்களில் ஆண்டிற்குரிய அளவான ரூபா 33,262,220 தொகை நடைமுறையல்லா செலவினத்திற்காக அரசாங்கத்திலிருந்து வருகின்ற கையளித்தல் கணக்கில் மாற்றப்படாமையின் காரணமாக விரிவான வருமானக் கூற்றின் மிகை ரூபா 33,262,220 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்குரிய இனங்காணப்பட்ட மூலதன மானியம் இல்லாதிருந்ததுடன் அது 2021 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | மூலதன மானியங்கள் நியமத்தின் பிரகாரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | ஆதன கடன் வட்டி செலவினம் ரூபா 717,,982 தொகை நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருந்த | 2021 ஆம் ஆண்டு முதல் ஆதன கடன் வட்டிக்காக பேரேட்டுக் கணக்கொன்றை பேணிச் | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அதற்குரிய பேரேட்டுக் கணக்கொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் ஆதனக் கடன் வட்டி செலவினம் உரிய செலவின குறியீட்டில் வரவு வைக்கப்படாமல் கடன்பட்டோர் மீதி தீர்த்தலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஓ) | மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட மீளளிப்பு செய்யப்பட வேண்டிய 522 செயற்திட்டங்களுக்குரிய கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 216,844,950 கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் பட்டோராக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஔ) | மேல்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய LGD/09/2019/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சரியான வகைப்படுத்தலின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 13,903,523 பெறுமதியான சொத்துக்கள் ஏனைய விடயங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிலையான சொத்துக்கள் உரிய வகைப்படுத்தலின் கீழ் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் சரியான வகையின் கீழ் வகைப்படுத்தாமையின் காரணமாக குறித்துரைத்த பெறுமானத் தேய்வு விகிதத்தை தீர்மானிக்க முடியாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்காக பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது ஏனைய விடயங்களின் கீழ் உள்ள சொத்துக்கள் மீண்டும் வகைப்படுத்தப்பட்டு 2020 இற்கான பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரியாக கணக்கீடு செய்யப்படுமென அறியத்தருகின்றோம். | பெறுமானத் தேய்வை கணிப்பிட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (க) | கூட்டுப்பெறுமதி ரூபா 2,887,276,847 ஆன பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய | 2021 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்வதற்கு | பெறுமானத் தேய்வை கணிப்பிட்டு கணக்கீடு செய்தல் |

| | | | |
|---|---|---|---|
| | நிலையான சொத்துக்களுக்காக 2020 ஆம் ஆண்டில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்தமையால் விரிவான வருமானக் கூற்றில் மிகை ரூபா 224,165,989 அதிகரித்தும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 224,165,989 இனால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (கா) | நானாவித கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு ரூபா 4,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (கி) | நிர்வாகச் செலவினம் 01-1400 இற்காக ரூபா 4,000 தொகை குறைத்து பதியப்பட்டமையினால் விரிவான வருமானக் கணக்கின் மிகை அப்பெறுமதியால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (கீ) | ஊழியர் சேமலாப நிதியத்தின் தவணைப் பணம் செலுத்துதல் தாமதமடைந்ததன் அடிப்படையில் செலுத்த வேண்டிய ரூபா 162,151 மிகைக் கட்டணம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிகைக் கட்டணத்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 563,614,382 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய கணக்காய்விற்குத் தேவையான விடயங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 இன் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(1) | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 7,946,976 உடன்படிக்கை பிணை வைப்பு, கேள்வி பிணை வைப்பு, வேலை பிணை வைப்பு மற்றும் நானாவித வைப்புக்கள் என்பவற்றை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019/2020/2021 ஆம் ஆண்டுகளின் போது ஏற்பட்ட நிலமையினால் உரிய தரப்பினருக்கு அது தொடர்பாக அறிவிக்கப்பட்ட போதும் அதற்கான பதில் தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. அவர்களுக்கு மீண்டும் அறிவித்து அதற்கு பதில் கிடைக்காதிருக்கு மாயின் அதனை அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 82,341,448 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 91,466,240 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 கடை வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெயாங்கொட உப அலுவலகத்திற்குரிய 23 கடைகளில் இருந்து அறவிட வேண்டிய 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய ரூபா 3,276,363 தொகையான முற்பண மீதி முறையான உடன்படிக்கை இன்மையின் அடிப்படையில் அறவிடுவதற்கு முடியாது | வெயாங்கொட உப அலுவலகத்திற்குரிய 23 கடைகளில் 05 கடைகள் (ரூபா 667,126) முத்திரை வைத்து சபைக்கு கையேற்று மீண்டும் கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த | கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு முன்னர் சட்டரீதியான உடன்படிக்கையில் கைச்சாத்திடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன் பதிவழிப்பதற்காக சபைக்கு சமர்ப்பித்து ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கடைகளில் முற்பணம் செலுத்தாத கடை உரிமையாளர்களுக்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முறையான உடன்படிக்கை காணப்படாமையின் அடிப்படையில் முடியாதிருந்தது. தற்போது அவர்கள் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு கலந்துரையாடல் நடாத்தப்பட்ட போதிலும் அந்த விற்பனை கடைகளில் பௌதீக திட்டத்தில் உள்ள வழுக்களின் பிரச்சினைகளால் இந்த முயற்சியும் தோல்வியடைந்திருந்தது. தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபை மூலம் புதிய நிர்மாணத்திற்கு தேவையான அடிப்படை செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. இது தொடர்ச்சியாக பல வருட காலம் காணப்படுகின்ற பிரச்சினையாகும். முற்பணத்தை பதிவழிப்பதற்காக சபைக்கு சமர்ப்பித்து ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவைக் கடை வாடகை மீதி ரூபா 2,435,314 தொகையில் வியாங்கொட உப அலுவலகத்தில் முத்திரை வைக்கப்பட்ட 07 கடைகளின் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவையான ரூபா 768,610 கடை வாடகைகளில் உடன்படிக்கை மற்றும் பௌதீக திட்டங்களின் | 2021 மார்ச் மாதம் வரை இந்த தொகையில் ரூபா 11 இலட்சம் அறவிடப்பட்டுள்ளது. 2021 வரையில் ஏற்பட்ட நிலைமையின் அடிப்படையில் மிகுதிப் பணத்தை அறவிடுவதற்கு இடையூறுகள் ஏற்பட்டிருந்தன. வியாங்கொட உப அலுவலகத்தில் ரூபா 1,509,755 தொகையில் | நிலுவைக் கடை வாடகையை அறவிடும் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பிரச்சினைகளால் அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாதிருந்தது. | முத்திரை வைக்கப்பட்ட 07 கடைகளில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவையாக ரூபா 768,610 தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை அவ்வாறே இந்தக் கடைகளின் உடன்படிக்கை பிரச்சினையாக காணப்பட்டமையால் அதிலுள்ள பௌதீக திட்டத்தின் பிரச்சினையாலும் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இடையூறாக காணப்பட்டது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### 3.1.1 கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக ரூபா 10,895,000 தொகை எட்டானாவத்த கழிவுப்பொருள் தளத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் கேள்வி நிபந்தனை 07 இன் பிரகாரம் உரிய உள்ளூராட்சி நிறுவனத்திலிருந்து அனுமதி, நிபந்தனை 08 இன் பிரகாரம் கழிவுப்பொருட்கள் அகற்றப்படுகின்ற இடத்தில் உரிமையாளரின் எழுத்துமூல இணக்கப்பாடு மற்றும் சுற்றாடல் அதிகாரசபையிலிருந்து சுற்றாடல் அனுமதிப்பத்திரம் என்பன பெறப்பட்டிருக்கவில்லை. | அந்த கழிவுப்பொருட்களை அகற்றும் கேள்விக்காக கூறுவிலை கோரும் கேள்வி நிபந்தனைகளுக்கு இணங்க சமர்ப்பித்த எந்தவொருவரும் அந்த நிபந்தனையை பூர்த்தி செய்திருக்கவில்லை. ஏலவே நாளொன்றுக்கு சேகரிக்கப்படுகின்ற கழிவுகளின் அளவு 15 தொன்னினை அகற்றுவதற்கு முடியாதிருந்தது குவிக்கப்பட்டிருந்த, இந்த சிக்கலான நிலைமையில் காணப்பட்ட, அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர் ஒருவரை நிராகரிப்பதாயின் நிறுவனத்திற்கு மாற்றுவழிகள் காணப்படாதிருந்தமையால் அதிக பிரச்சினைகள் | கேள்வி நிபந்தனைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஏற்படக்கூடியதாக இருந்தது. இவை யாவற்றையும் கவனத்தில் கொண்டு அந்த கேள்வி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாதிருந்த போதிலும் அவசர தேவையாக கருதி குறைந்த விலையை சமர்ப்பித்த அவருக்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. | |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் 38980 என்ற காணி வழக்கு தொடர்பாக சபை செயற்பட்ட முறையற்ற மற்றும் கவனமின்மையின் காரணமாக சபை நிதியத்திலிருந்து முறைப்பாட்டாளருக்கு 2019 மே 16 ஆந் திகதி ரூபா 1,876,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2022 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையிலும் பொறுப்புக்கள் தீர்மானிக்கப்பட்டு விசாரணையொன்று மேற்கொண்டு சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1996 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வீதிக் குழப்பத்தினால் 39/380 ஆம் இலக்க காணி வழக்கிற்குரிய நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 மே 16 ஆந் திகதி செலுத்தப்பட்ட ரூபா 1,876,800 தொகையை தீர்த்து வைப்பதற்கு அந்த பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்கு விசாரணையொன்றை மேற்கொள்வதற்காக உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக மீள் நினைவூட்டலும் அனுப்பப்பட்டுள்ளது. | மிக விரைவில் விசாரணை அறிக்கையினை பெற்று நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |